விவசாயிகள் சென்று வாங்கி வருகிறார்கள். முதலைப்பட்டி தோட்டக்கலைப் பண்ணையில், விவசாயிகளுக்குப் பயிற்சி மையம் நிறுவி, செடி உற்பத்தி செய்வது பற்றிய செயல் முறை பயிற்சி அளித்தால், அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் அடைவார்கள். ஆகவே, குளித்தலை தொகுதி, முதலைப்பட்டி தோட்டக்கலைப் பண்ணையில் தோட்டக்கலை விவசாயப் பண்ணை பயிற்சி மையம் அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்த் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை ஒரு விண்ணப்பமாக எழுதி அரசுக்குத் தருவாரானால், அதைப் பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

172—

பேருந்து வசதி

***57306—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூரிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத் தடம் எண் 468-ல் ஊட்டியிலிருந்து சென்னைக்கு குன்னூர்

2010 மே 12]

வழியாக தினசரி 2 அதிநவீன சொகுசு மிதவைப் பேருந்துகள் 2 நடைகள்வீதம் இயக்கப்பட்டு வருகின்றன. இத்தடப் பேருந்து வசதி குன்னூர்-சென்னை பயணிகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது. இந்நிலையில் குன்னூர்-சென்னை வழித்தடத்தில் பிரத்தியேகமாகப் பேருந்து இயக்க இப்போதைக்கு சாத்தியமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், சுற்றுலாத் தலங்கள் மிகுந்த பகுதி மட்டுமல்ல, உலக அளவிலும் பிரசித்தி பெற்றது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. சினிமா ஷூட்டிங்கிற்கு வருகின்ற தொழிலாளர்களும் அங்கு அதிகமாக உண்டு. இது போக, தமிழகத்தின் பல்வேறு அமைப்புகள் தங்கள் நிகழ்ச்சிகள், கூட்டங்களை நடத்த நீலகிரியைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி, மாவட்ட மக்களின் நலன் கருதி, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலமாகப் பேருந்து விட வேண்டும். குறிப்பாக, தொகுதிக்கு ஒரு பேருந்து இயக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில், விரைவில் குன்னூரிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து, குறிப்பாக A.C. வசதியோடுகூடிய விரைவுப் பேருந்துகளை இயக்க அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதகையிலிருந்து குன்னூர் 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள காரணத்தால், குன்னூருக்கு என்று தனி இடங்கள் ஒதுக்கப்பட்டு, முன்பதிவு செய்வதற்கு ஏதுவாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, தனியாகக் குன்னூரிலிருந்து விட வேண்டுமென்று சொன்னால், எந்த அளவிற்குப் பயணிகளுடைய அடர்வு இருக்கும் என்பதைக் கணக்கில் கொண்டு ஆய்வு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காலையிலே பேசுகின்றபோது, எங்களுக்கு அவசியம் தேவை என்று சொல்லியிருக்கின்றார். Ultra Deluxe, A/c Bus என்று விட

TAMIL NADU LEGISLATURE TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

[2010 மே 12

முடியவில்லையென்றாலும், புது வண்டியாக இன்னும் ஓரிரு வாரங்களில் குன்னூரிலிருந்து சென்னைக்கு, ஆய்வு செய்த பிறகு, விடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன்.

திரு. அ. சௌந்திரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஆ. அங்கையற்கண்ணி.

செல்வி ஆ. அங்கையற்கண்ணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரம் தொகுதியில், சங்கராபுரத்தில் புதிய பேருந்துப் பணிமனை வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டு, 2008 ஆம் ஆண்டு கழக ஆட்சியில் புதிய பணிமனை கட்டி முடிக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. இப்பணிமனைக்கு அருகில் உள்ள கள்ளக்குறிச்சி பணிமனையில் இருந்துதான் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. சங்கராபுரம் பணிமனைக்குத் தனியாக 25 பேருந்துகள் வேண்டுமென்று கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது. சங்கராபுரம் மற்றும் ரிஷிவந்தியம் தொகுதிகளின் கிராம மக்கள், 25 பேருந்துகளை இயக்கினால் மிகவும் பயனடைவார்கள். எனவே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் 25 பேருந்துகளை சங்கராபுரம் பணிமனைக்கு இயக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அதைத் தொடங்கி வைப்பதாகவும், நான் தேதி தருகின்றபோது அந்த 25 பேருந்துகளை அங்கிருந்து தொடங்கலாம் என்றும் சொல்லியிருக்கிறார். எனவே, உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் தேதி தருகின்ற அன்றைக்கு அந்த 25 பேருந்துகளும் தொடங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. எதிரொலி மணியன்.

TRUTH ALONE TRIUMPHS

2010 மே 12]

திரு. கோ. எதிரொலி மணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேட்டதையெல்லாம் கொடுத்தான் கீதையிலே கண்ணன் என்பதுபோல, கேட்ட பாதையெல்லாம் பேருந்து வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும் மன்னன், எங்கள் அண்ணன் நேரு அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனது பெரணமல்லூர் தொகுதிக்குட்பட்ட மன்சுராபாத் கிராமம் வழியாக, திருவண்ணாமலையிலிருந்து ஆரணிக்கு, மங்கலம், தேவிகாபுரம் வழியாக ஒரு பேருந்து இயக்க வேண்டுமென கடந்த இரண்டாண்டு காலமாகக் கோரிக்கை வைத்து வருகிறேன். அமைச்சர் அவர்களும் அதற்கு இசைவு அளித்தார்; பணிகள் முடிவுற்றன, ஆனால் பேருந்து இதுவரை இயக்கப்படவில்லை. எனவே, அந்தப் பேருந்தை இயக்கி, இதுவரை திருவண்ணாமலைக்கு நேரடிப் பேருந்து வசதியில்லாத பத்தியாவரம், தேவிகாபுரம், மன்சுராபாத் போன்ற கிராமங்கள் வழியாகப் பேருந்துகளை இயக்க, ஆரணியிலிருந்து திருவண்ணாமலைக்கு பஸ் வசதி ஏற்படுத்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை தனி மண்டலமாக அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னார்; தனி மண்டலமாக அமைக்கப்பட்டது. திருவண்ணாமலைக்கு 100 புதிய பேருந்துகள் தரப்பட வேண்டுமென்று சொன்னார், 100 புதிய பேருந்துகள் அங்கு தரப்பட்டிருக்கின்றன. திருவண்ணாமலையில் புதிய, புதிய வழித்தடங்கள், எந்தெந்தப் பகுதிகளிலே பஸ் விட வேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டாரோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் இதுவரை பஸ் விடப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே தெரிவித்திருப்பதாக இங்கு சொல்லியிருக்கிறார்கள். எனவே, இன்று அதிகாரிகளோடு அதைப் பற்றி கலந்து பேசி, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை விரைவில் நிறைவேற்ற நிச்சயமாக முடிவு செய்யப்படும்.

TRUTH ALONE TRIUMPHS

[2010 மே 12

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.*

திரு. என். மாலைராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியிலிருந்து தேனி, போடி வழியாக மூணாறுக்கு ஒரு அரசு விரைவுப் பேருந்து வேண்டுமென்று கேட்டேன். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அதனை உடனடியாக இயக்கவும் ஆணை பிறப்பித்தார்கள். தற்போது அங்கு பயணிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், கூடுதலாக மேலும் ஒரு பேருந்தினை மூணாறுக்கு அந்த வழித்தடத்தில் இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூணாறுக்குப் பேருந்து விடவேண்டும் என்று சொன்னால் பக்கத்து மாநிலத்தோடு போடப்பட்ட ஒப்பந்தத்தில் ஏற்கெனவே அது சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். குறிப்பாக, அதிகமான கிலோ மீட்டர் தூரம், கிட்டத்தட்ட 9,000 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பேருந்தினை இயக்கலாம் என்று இந்த முறை கேரள மாநிலத்தோடு புதிய ஒப்பந்தம் போடப்பட்டது. ஏற்கெனவே உள்ள பேருந்துகளையெல்லாம் அங்கே 9,000 கிலோ மீட்டர் தூரம் வரை இயக்கிக்கொண்டிருக்கிறோம். எந்த வழித்தடத்திலாவது பயணிகள் எண்ணிக்கை குறைவாக இருக்குமானால், அந்த கிலோ மீட்டர் தூரத்தினை இதிலே கணக்கெடுத்து, மீண்டும் ஒரு பேருந்தினை மூணாறுக்கு விட நாங்கள் ஏற்பாடு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 173, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*